# பத்திரிக்கை செய்தி

எச்1/8001/2017 மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாள்: 14.10.2019 விழுப்புரம்.

விழுப்புரம் மாவட்டம் நெ.75.விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் 21.10.2019 அன்று நடைபெற உள்ளது தொடர்பாக 275 வாக்குச்சாவடிகளுக்கு வாக்குச்சாவடி வாரியாக அனுப்பப்பட வேண்டிய மின்னணு ஓட்டு பதிவு இயந்திரங்களை இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்திரவின்படி கணினி மூலம் குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யும் பணி ( Second Randomization of EVMs & VVPATs) 14.10.2019 இன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., நெ.75.விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி தேர்தல் பொதுப்பார்வையாளர் திரு.சினுவீரபத்ருடு,இ.ஆ.ப., ஆகியோர் தலைமையில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் நெ.75.விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இதன்படி நெ.75.விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு தேவையான 344 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள்(BU), 344 மின்னணு வாக்கு எண்ணிக்கை இயந்திரங்கள்(CU) மற்றும் 358 வாக்களிப்பதை உறுதி செய்யும் இயந்திரம் (VVPAT) ஆகியவை கணிணி மூலம் குலுக்கல் செய்யப்பட்டு நெ.75.விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு 275 வாக்குச்சாவடிகள் வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேற்படி பணியின்போது கூடுதல் ஆட்சியர்(வருவாய்) திருமதி.ஸ்ரேயா பி. சிங் இ.ஆ.ப., நெ.75.விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.மு.சந்திரசேகர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(தேர்தல்) திரு.வீ.பிரபாகர், தனி வட்டாட்சியர்(தேர்தல்) திரு.வெ.சீனுவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாவட்ட ஆட்சியருக்காக,
விழுப்புரம்.

14/10/19